**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண்.338/2024 நாள் :10.04.2026

வா.சா:–1 பழனியம்மாள் ஆஜர், சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி(பிரதிவாதி தரப்பில்):–

தாவா சொத்தின் வில்லங்க சான்றை எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். எத்தனை வருடங்களுக்கு பார்த்தேன் என்றால் 10 வருடங்களுக்கு பார்த்தேன். பிரதிவாதி கிரையம் செய்த விவரம் தெரிந்து கொண்டேன். தாவாவில் 2 அயிட்டமும் கிரையம் பெற்றுள்ளாரா என்றால் 2010ல் ஒன்றும் 2011ல் ஒன்றும் கிரையம் பெற்றுள்ளார். 2010 மற்றும் 2011ல் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது. எனது அண்ணன் மகன் செந்தில்குமார் என்கிற செந்தில் எப்போது இறந்தார் என்றால் 2023. நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் என்றால் ஒரு பர்லாங்கு இருக்கும். கந்தசாமி கவுண்டர் என்பவர் எனது அப்பா. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 1993ல் இறந்துவிட்டார். எனது அப்பா கந்தசாமி இறந்தபோது அவரது தாயார் உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இல்லை. எனது அப்பா இறக்கும்போது எனது தாயார் முத்தாயம்மாள் உயிருடன் இருந்தார்.

என் அண்ணன் தங்கவேல் 1986ல் இறந்துவிட்டார். எனது அப்பா கந்தசாமி இறந்தபோது யார், யார் வாரிசு என்றால் நானும், எனது தாயாரும் , தங்கவேலின் மனைவி மீனாட்சி , செந்திலும் வாரிசுதாரர்கள். சொத்துக்களை கந்தசாமி கிருஷ்ணசாமி என்பவருக்கு அடமானம் வைத்திருந்தார் என்று எதிர் வாதத்தில் கூறியுள்ள விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த கடனை கட்ட முடியாமல் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.635/1996 ஏலத்திற்கு வந்தது என்றால் சரிதான். ஏலத்திற்கு வந்த சமயத்தில் எனக்கு திருமணம்

ஆகியிருந்தது. அந்த ஏலத்தை இரத்து செய்வதற்காக பணத்தை கட்டி யார் இரத்து செய்தார்கள் என்றால் தெரியாது. முத்தாயம்மாள், மீனாட்சி, செந்தில்குமார் ஆகிய மூவரும் அந்த கடனை செலுத்தி 05.02.1997ல் அடமானத்தை மீட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. கடனை கட்டி மீட்ட சொத்து தன்னுடைய பாகத்தை முத்தாயம்மாள் பேரனுக்கு தான செட்டில்மென்ட் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் அப்போது தெரியாது. வில்லங்கம் எடுத்து பார்த்தபோதுதான் தெரியும். 1992ல் இருந்து என்னென்ன பத்திரங்கள் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு அவ்வப்போதே தெரியும் வழக்கிற்காக வில்லங்க சான்று பார்த்து தெரிந்து கொண்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 10 வருடத்திற்கு வில்லங்க சான்று பார்த்தாக கூறிவிட்டு தற்போது அதற்கு முந்தைய ஆவணத்தை பொறுத்து வில்லங்கம் பார்த்து தெரிந்து கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 அயிட்ட சொத்து பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்து 1 ஏக்கர் 11 சென்ட் பொறுத்து அந்த பூமி தண்ணீர் வசதி உடையது அல்ல என்றால் தெரியாது. 1 ஏக்கர் 11 சென்ட் பூமியை பிரதிவாதி 14.03.2011ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்து ரூ.2,00,000/– கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்து 1 ஏக்கர் 41 சென்ட் தங்கராஜ் 10.02.2010 ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2வதுஅயிட்ட சொத்து ரூ.2,90,000/–த்திற்கு கிரையம் பெற்றுள்ளார் என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 2வது அயிட்ட சொத்தில் தங்கராஜ் கிரையம் பெற்ற பின்னர் ஒரு கிணறு வெட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த கிணறு வெட்ட நான் பணம் கொடுத்தேன். செந்தில் என்னிடம் ரூ.4,00,000/– வாங்கிச்சென்றார். பணம் கொடுத்து சுமார் 5 வருடங்கள் இருக்குமா என்றால் 6 வருடத்திற்கு மேல் இருக்கும். வங்கியில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்தேனா என்றால் ஆமாம். பணம் கொடுத்தற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் பார்த்தால்தான் தெரியும். 8 வருடத்திற்கு முன்னர் தக்கல் திட்டத்தின் கீழ் 09.10.2017 தேதியில் புது கிணற்றிற்கு மின்

வாரியத்திற்கு ரூ.2,50,000/- கட்டி மோட்டார் இணைப்பு பெறப்பட்டதா என்றால் ஆமாம். கடந்த 10 ஆண்டுகளுக்குள் தாவா சொத்துக்கள் நிரவப்பட்டு வயல்கள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்களுக்கு வரி செலுத்தினேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. 2010 மற்றும் 2011 தேதியிட்டகிரைய ஆவணங்களின் படி பிரதிவாதி தன் பெயரில் தனிப்பட்டா வாங்கி 15 வருடங்களாக அனுபவித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா இறந்து 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள்தான் . எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பே இந்த சொத்தில் உரிமை இருந்ததா என்றால் இருந்தது. எனது அப்பா இருக்கும்போது நான் பங்கு கேட்டேனா என்றால் பங்கு கேட்டேன். நகையும்கேட்டேன் கொடுக்கவில்லை. எனது சகோதரர் தங்கவேலிடம் பங்கு கேட்டேனா என்றால் கேட்கவில்லை. செந்திலிடம் பங்கு பிரித்து கேட்க சொல்லி கேட்டேனா என்றால் 10,15 வருடங்களாக கேட்டு வந்தேன். செந்தில் கொடுக்க முடியாது என்று கூறினாரா என்றால் ஆமாம். செந்தில் குமார் உயிருடன் இருக்கும் காலத்தில் அவர் பங்கு கொடுக்க மறுத்த பின்னிட்டு அவர் இறப்பதற்கு முன்னர் பாகம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் இறந்து 15 வருடங்களுக்குள் இருக்கும். 2023ல் இறந்தார். இந்த சொத்தில் கிரைய தேதியில் இருந்து தொடர்ந்து அனைவருக்கும் தெரிய வெளிப்படையாக எவ்வித ஆட்சேபணையும் இன்றி இன்று வரை பிரதிவாதி தாவா சொத்துக்களில் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி பெறும் செலவு செய்து மேம்பாடுகள் செய்துள்ளதால் தகைமையின் அடிப்படையில், ஒரு வேளை நீதிமன்றம் பாகபிரிவினைக்கு தீர்ப்பளிக்கும் பட்சத்தில் அந்த சொத்து அவருக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கோரியிருக்கிறார் என்றால் சரியல்ல.

நான் சுவாதீனத்தில் இல்லாததால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற

கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்பது போல் தாவா சொத்தில் 1/3 பாகம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.10 14:46:30 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |